உ

திருச்செந்திலாண்டவன் துணை

# உண்மை நெறி விளக்கம்

(தெளிவுரையுடன்)

★

20—11—1978

T17364
R005J07
T.17364

★

விலை ரூ. 0—75

ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# உண்மை நெறி விளக்கம்

## ( தெளிவுரையுடன் )

திருப்பனந்தாள்

ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களின்

அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெற்றது

பதிப்பாசிரியர்:

தருமபுர ஆதீனப் புலவர்

தொல்காப்பியச் செல்வர், சித்தாந்தநன்மணி, பண்டித வித்துவான்

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ.,

முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி,

திருப்பனந்தாள்.

ஸ்ரீ காசிமடம் 1978 திருப்பனந்தாள்

முதற்பதிப்பு

படிகள் 1500

இதன் விற்பனைத்தொகை ஸ்ரீ குமரகுருபரர் இதழ் வளர்ச்சியைச் சாரும்.

கிடைக்குமிடம் :-

நிர்வாக ஆசிரியர்,
'ஸ்ரீ குமரகுருபரர்', காசிமடம்,
திருப்பனந்தாள் – 612504
தஞ்சை மாவட்டம்.

ஜெமினி அச்சகம், கும்பகோணம். (போன் : 835)

# பதிப்புரை

கடையவ னேனைக் கருணையினால் கலந்து ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்(கு) அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே.

உண்மை நெறி விளக்கம் என்னும் நூல் மெய்கண்ட நூல்களுள் ஒன்றாக வைத்து எண்ணப் பெறுவது. இது சீர்காழித் தத்துவநாதரால் அருளிச் செய்யப்பெற்றது.

பாயிரத்துடன் ஏழு பாடல்களை உடையது. இறையருளால் உயிர்பெறும் பேற்றைப் பத்துவகை நிலைகளில் வைத்துக் கூறுவது. இந்நூலுக்குச் சிந்தனை உரை, நமச்சிவாயத் தம்பிரான் உரை முதலிய பல உரைகள் உள்ளன. திரு. கா. சு. பிள்ளை அவர்கள் உரைநடையாக எழுதிய உரை ஒன்றும் உள்ளது. இவையன்றி வேறு சில உரைகளும் அவ்வப்பொழுது எழுதப் பெற்றுள்ளன.

இப்பதிப்பில் பொருள் உணர்ந்து படிப்பதற்கு ஏற்பப் பாடல்கள் சந்தி பிரித்து எழுதப் பெற்றுள்ளன. பயில்வோருக்குப் பொருள் விளங்கத் தெளிவுரை தரப்பெற்றுள்ளது.

இதனை இம்முறையில் வெளியிட வேண்டும் எனத் திருவுளம் பற்றியவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபராக எழுந்தருளி இருப்பவர்களும், இமயம் முதல் குமரி வரை உள்ள எண்ணில் அறக்கட்டளைகளைத் தம் கண் எனப் பேணிப் புரந்தருளுபவர்களும் ஆன **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** ஆவார்கள். இவர்களின் பேரருட் பெருக்கால் திருவருட் பயன் என்னும் நூல் தெளிவுரையுடன் அண்மையில் வெளிவந்தது. இதுபொழுது

இந்நூல் வெளிவருகிறது. சிவஞான போதச் சிற்றுரை நுண் பொருள் விளக்கத்துடன் வெளிவர இருக்கிறது. மெய்கண்ட நூல்களை இவ்வாறு தொடர்ந்து வெளியிடத் திருவுளம் பற்றி இருக்கும் அவர்களின் கருணைப் பெருக்கினை என்றும் போற்றி வணங்குகின்றேன்.

சென்னைப் பல்கலைக் கழக இளங்கலை நிறைநிலை (B. Lit.) மாணவர்களுக்கும், சென்னை, அண்ணமலை, மதுரைப் பல்கலைக் கழக முதுகலை மாணவர்களுக்கும் மெய்கண்ட நூல்கள் பலவும் பாடமாக வைக்கப்பெற்றுள்ளன. மாணக்கர் உலகும், தமிழ்ச் சைவ உலகும் இதனை ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன். இத்தகைய நற்பணியில் ஈடுபடுத்திவரும் திருவருளை மனம், மொழி, மெய்களால் வழுத்துகிறேன்.

இந்நூல் வெளிவருங்கால் அச்சுப்படிகளைத் திருத்தியுதவிய நண்பர் பேராசிரியர் **திரு. தா. ம. வெள்ளைவாரணம்** அவர்களுக்கும், நன்முறையில் வெளியிட்டுத் தந்த **ஜெமினி அச்சகத்தாருக்கும்** என் நன்றி உரியது.

# ஆராய்ச்சி முன்னுரை

தோற்றுவாய் :

இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள்களின் உண்மைகளை அளவைகளானும், பொருந்துமாற்றானும், நன்கு ஆராய்ந்து கூறும் நூல்களை மெய்கண்ட நூல்கள் (சித்தாந்த சாத்திரம்) எனக் கூறுவர். இவ்வகையில் வெளிவந்த நூல்கள் பலவேனும், பிற்காலத்தார் பதினான்கு நூல்களைச் சிறப்பாக வேறுபிரித்து ஓதினர்.

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம் — வந்தஅருள்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று.

என்னும் பழம்பாடல் ஒன்றால் அந்நூல்கள் இவை என அறியலாம். இவற்றுள் உண்மை நெறி எனக் குறிக்கப்பெறும் நூலே உண்மை நெறி விளக்கம் என்னும் இந்நூல் ஆகும்.

உண்மை நெறி விளக்கம் – பெயர்க் காரணம் :

உயிர் ஆணவ மலத்தால் கட்டுண்டு அறிவின்றிக் கண்ணிலாக் குழவியைப்போல் அறிவற்றுக் கிடக்கும் நிலையைக் கேவலநிலை என்பர். அவ்வாறு கட்டுண்ட உயிர் அம்மலப் பிணிப்பினின்றும் நீங்க இறைவன் தன் பேரருள் பெருக்கால் உடல், கருவி, உலகு ஆகியவற்றைத் தந்து அவற்றோடு இயைவித்து, வினையை நுகரச் செய்வன். இந்நிலையைச் சகலநிலை என்பர். அவ்வாறு திருவருளால் நுகர்வுபெற்ற உயிர் வினைமாசுகள் நீங்கப்பெற்றுப் பக்குவமுற்ற நிலையில் இறைவன் முத்திப்பேற்றை வழங்கி அருளுவன். அவ்வாறு உயிர் வீடுபெற்று இன்புறுநிலையைச் சுத்த நிலை என்பர். இதனைக்,

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட்(டு) அல்லலாம்
காப்பிட்(டு) அதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவினை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்(டு)அமைத்திட்(டு)
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பில் நமனைவிட்(டு)
இடர்உற உறுக்கியிடர்தீர்த்(து)
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொண்மின் என்று
சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணு மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே

எனவரும் தாயுமானவரின் திருவாக்கு நன்கு விளக்கும்.

உயிர் இவ்வாறு படிப்படியாக வளர்ச்சிபெற்று இன்புறுதற் குரிய நிலையைப் பத்துவகையான படிகளில் வைத்து விளக்குவர் ஆசிரியர். இந்நிலைகளைத் "தசகாரியம்" என்பர். அவை தத்துவ வடிவு (தத்துவ ரூபம்), தத்துவக் காட்சி (தத்துவ தரிசனம்), தத்துவத் தூய்மை (தத்துவ சுத்தி), உயிர் வடிவு (ஆன்ம ரூபம்), உயிர்க் காட்சி (ஆன்ம தரிசனம்), உயிர்த் தூய்மை (ஆன்ம சுத்தி), சிவ வடிவு (சிவ ரூபம்), சிவக் காட்சி (சிவ தரிசனம்), சிவக் கலப்பு (சிவ யோகம்), சிவ நுகர்வு (சிவ போகம்) என்பன. இவ் வுண்மைகளை நெறிபடுத்தி விளக்குதலால் இந்நூல் உண்மை நெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது.

நுவலும் பொருள் :

**தத்துவ வடிவு :** நிலம் முதல் சிவம் ஈருன முப்பத்தாறு தத்துவங்களால் கூட்டப்பெற்ற உடல், கருவி, உலகு, நுகர்வு, செய்தி ஆகியவற்றை உயிர் தன்னின் வேருகக் காண்பதாகும்.

**தத்துவக் காட்சி:** மேற்கூறிய முப்பத்தாறு தத்துவங்களையும், தூயதும் (சுத்த மாயை), தூய்மை அல்லாததும் (அசுத்த மாயை) ஆன சுத்தாசுத்தமாயையின் விளைவு என்றும், அவை அறிவற்றன என்றும் அறிவதாகும்.

**தத்துவத் தூய்மை:** (அஃதாவது தத்துவ நீக்கம்) மேற்கூறிய முப்பத்தாறு தத்துவங்களில் எதனையும் தான் பற்றி நில்லாமல் அவற்றை விட்டு நீங்குவதாகும்.

**உயிர் வடிவு:** உயிர் ஆணவ மலத்தினின்றும் நீங்கப் பெற்றுத் திருவருளைத் தனது அறிவின்கண் காண்பதாகும்.

**உயிர்க் காட்சி:** அவ்வாறு கண்ட உயிர் தன் செயல் அற்று நிற்பதாகும்.

**உயிர்த் தூய்மை:** இந்நிலைக்கு வந்த உயிர் இதுகாறும் உலகியற் பொருள்கள் ஒவ்வொன்றிலும் அழுந்தியும், அறிந்தும் நின்ற நிலை நீங்கப்பெற்றுத் திருவருளால் சிவத்தைப் பெற்று அதனுள் அடங்கித் தான் வெளிப்படாதிருக்கும் நிலையாகும்.

**சிவ வடிவு:** மன்னுயிர்தோறும் நிலைபெற்றிருக்கும் பரம் பொருள் கருணையே திருவடிவாகக்கொண்டு உயிர் வினைமாசு கெட்டு, இன்புறுதற்காகப் படைத்தல் முதலிய ஐந்தொழிலையும் செய்கின்றது. இவ்வாறு காத்தருளுவோன் சிவபெருமான் ஒருவனே என உயிர் தனது அறிவில் காண்பதாகும்.

**சிவக் காட்சி:** யான், எனது என்னும் செருக்கறுமாறு திருவருள் உயிர்களிடத்துப் பொருந்தியிருப்பதே இறைவனின் திருவடியாகும். பார்க்குமிடம் எங்கணும் சிவமாகவே தோன்றுவது இறைவனின் திருமுகமாகும். இறைவனிடத்து விளங்கிநிற்கும் பேரின்பமே இறைவனின் திருமுடியாகும். இவ்வுண்மைகளை உணர்ந்த உயிர் யாண்டும் நீக்கமற நிற்கும் அப்பரம்பொருளைத் தம் பட்டறிவால் கண்டு உடல், கருவி, உலகு முதலிய கட்டுக்களினின்றும் கழன்று திருவருள் இன்பத்தைப் பெறுவதே **சிவக்காட்சி**யாகும்.

**சிவக் கலப்பு :** உயிர் உடலோடு கூடி வாழுங்கால் எத்தகைய பொருள் எதிர்ப்படினும், அவற்றை அவ்வளவில் உணராது அவற்றின் மெய்மையை உணர்ந்து அவற்றில் பற்று வைக்கும் உயிரியல்பையும், அவ்வுயிர்க்கும் மேலாகிய அருளையும், அதற்கும் மேலாக விளங்கும் சிவத்தையும் உணர்ந்து அச் சிவத்தையே பற்றிநின்று நினைவு, மறப்பு, உணர்வு, துய்ப்பு ஆகிய அனைத்திற்கும் அப் பரம்பொருளே காரணம் என்பதை நன்கு உணர்ந்து அதனோடு வேறறக் கலந்து நிற்பதாகும்.

**சிவ நுகர்வு :** மேற்கூறியவாறு சிவத்தொடு கலந்த அருளாளர்கள் வினைவயத்தால் பாதகங்கள், கொலை, களவு, கள்ளுண்ணல், தீநெறி பற்றி வாழ்தல், குலமுறை தப்பி வாழ்தல், பிறரால் தவறு தலைப் பெய்யப்படுதல் முதலிய தீமைகளைப் பெறினும் அவர்கள் தம்வயத்தராக அன்றி இறைவயத்தராகித் தம் செயலற்று நிற்பதால் இறைவனும் அவர்களொடு கலந்து அவர்கள் உண்டல், உறங்கல், நடத்தல் முதலிய பலவகைச் செயல்களைச் செய்யினும், அவற்றைத் தம் செயலாக ஏற்றுத் தன் வயமாக்கிவிடுவன். இந்நிலையில் உயிர்பெறும் இன்பமே சிவ நுகர்வு ஆகும்.

இப் பத்துவகை நிலைகளில் முதல் மூன்று நிலைகளை முதல் பாடலிலும், அடுத்த மூன்று நிலைகளை இரண்டாவது பாடலிலும், அடுத்த நான்கு நிலைகளை முறையே மூன்று, நான்கு, ஐந்து, ஆறுவது பாடல்களிலும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**ஆசிரியர் :**

இந்நூலை அருளியவர் உமாபதி சிவாச்சாரியார் என்பது மரபாகக் கூறப்பட்டு வந்த கருத்து ஆகும். எனினும் அறிஞர் பெருமகனாகிய திரு. S. அனவரத விநாயகம் பிள்ளை என்பார் தம் ஆய்வின் பயனாக இதனை அருளியவர் சீர்காழித் தத்துவநாதர் எனக் கூறியுள்ளார். தருமையாதீனத்தின்மூலம் வெளிவந்த மெய்கண்ட சாத்திரப் பதிப்பில் இக் கருத்தே ஏற்றுக் கொள்ளப் பெற்றுள்ளது. இதற்குரிய காரணங்களாவன :

1. எண்ணும் அருள்நூல் எளிதின் அறிவாருக்கு
உண்மை நெறிவிளக்கம் ஓதினுன் – வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனுர் தாளே புனைந்தருளும்
நண்பாய தத்துவ நாதன்.

எனவரும் பழம்பாடல் ஒன்று இந்நூலின் பாயிரச் செய்யுள் ஆக சிந்தனை உரையில் உள்ளது. சென்னை இராசாங்கக் கையெழுத்து நூல் நிலையத்துப் பதிப்பிலும் திருவாரூர் சோமசுந்தர தேசிகரிடத்து இருந்த உரைப் பதிப்பிலும், இப்பாடல் உள்ளது. இப்பாடலில் தண்காழித் தத்துவனுர் எனப் பொதுப்படக் கூறப் பட்டுள்ளதேயன்றி, இவர்பெயர் இன்னதென விளங்கக் கூறவில்லை. எனினும் இத்தொடரால் குறிக்கப்பெற்றவர் சீர்காழிச் சிற்றம்பல நாடிகளேயாவர் என்பதைப் பின்வரும் உண்மையால் அறியமுடிகிறது.

சீர்காழித் தத்துவநாதர் என்பார் இந்நூலன்றி இருபா இருபஃது என்ற நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். அவ்வுரை இறுதியில்,

"இருபா விருபது உரையெழுதி னேன்முன்
ஒருவா விகற்பம் உணர்ந்தோன் – அருள்உடம்பாம்
பண்புடைய சிற்றம் பலநாடி தாள்பணிவோன்
சண்பைநகர்த் தத்துவ நாதன்"

என ஒரு வெண்பா காணப்படுகிறது. இதனுல் சீர்காழித் தத்துவ நாதரின் ஆசிரியர் சிற்றம்பல நாடிகள் என்பது நன்கு விளங்கு கின்றது. எனவே சீர்காழிச் சிற்றம்பல நாடிகளின் மாணவராகிய சீர்காழித் தத்துவநாதரே இந்நூலின் ஆசிரியர் எனத் தெளிவாகிறது.

2. சீர்காழிச் சிற்றம்பலநாடிகள் அருளிய துகளறு போதத்தில் கூறப்பெற்ற முப்பது நிலைகளும், உண்மைநெறி விளக்கத்தில் உள்ள ஆறு பாடல்களில் அமைந்துள்ளன எனச் சிந்தனைவுரை கூறுகிறது.

3. மெய்கண்ட நூல்கள் பதினன்கு என வரையறுத்து இருப்பது பிற்காலத்தார் கருத்தேயாகும். அங்ஙனம் வரையறுத்த பதினன்கனுள்ளும் * சில ஓலைச் சுவடிகளில் உண்மைநெறி விளக்கம் என்ற நூல் காணப்படவில்லை. அதற்கு மாருகச் சீர்காழிச் சிற்றம்பலநாடிகள் அருளிய துகளறு போதம் என்னும் நூல் சேர்க்கப்பட்டு மெய்கண்ட நூல்கள் பதினன்கு எனக் குறிக்கப் பெற்றுள்ளன. இச்சுவடிகளிலெல்லாம் உமாபதிசிவம் அருளிய நூல்கள் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, சங்கற்ப நிராகரணம் என்ற ஏழுமே உள்ளன.

சீர்காழிச் சிற்றம்பலநாடிகளின் மாணவர் என்பதன்றி இவர்தம் வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புக்கள் ஏதும் தெரிந்தில. இவர் செய்த நூல் ஈதொன்றேயாம். இதுவன்றி இருபா இருபஃது என்னும் நூலுக்குச் சிறந்ததொரு உரையும் எழுதியுள்ளார். இற்றைக்கு இருக்கும் மெய்கண்ட நூல்களுக்குள்ள உரைகளுள் இதுவே பழமையானதாகும். எனினும் இருபா இருபஃதின் இரண்டாவது பாடலில் பிறிதொரு உரையைக் காட்டி என்பாரும் உளர் எனக் கூறியுள்ளார். இதுவன்றி இவர் உரையில் நான்கு குறட்பாக்களும், மூன்று வெண்பாக்களும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இவை எந்நூலில் உள்ளன என விளங்கவில்லை. இவற்ருல் மெய்கண்ட நூல்களுக்கு இவர் காலத்திற்கு முன்னமேயே வேறுபல உரைகளும் இருந்தன எனத் தெரிகிறது. இவர்தம் உரையுள் அப்பர், சம்பந்தர் அருளிய தேவாரப் பாடல்களையும், போற்றிப் பஃறொடை என்னும் ஞான நூலையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

---

* திரு. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை, திரு. வையாபுரி பிள்ளை, திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணசலம் பிள்ளை ஆகியோரிடம் கிடைத்த ஓலைச்சுவடிகளில் உமாபதி சிவாச்சாரியார் செய்த நூல்களுள் உண்மைநெறி விளக்கம் என்று ஒரு நூல் காணப்படவில்லை.

**காலம் :**

சீர்காழிச் சிற்றம்பலநாடிகளின் காலம் கி. பி. பதினான்காம் நூற்றாண்டு எனத் தெரிவதால் இவர் காலமும் அதுவேயாம்.

**நூற் சிறப்பு :**

மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் மூன்று நூல்கள் மிகச் சுருங்கியனவாகும். 1. வினாவெண்பா (13 பாடல்கள்) 2. கொடிக்கவி (4 பாடல்கள்) இவை உமாபதி சிவம் அருளியவை. 3. இந்நூல் பாயிரத்தோடு ஏழு பாடல்களால் ஆயதாகும். இந்நூல் பாடல் தொகையால் சுருங்கியது ஆயினும், மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் ஒன்றாக வைத்துக் கூறி இருப்பது இதன் பெருமையை விளக்கும்.

சிவப்பிரகாசமும், துகளறு போதமும் உயிர் அடையத் தக்க இப்பத்து நிலைகளையும் விளக்கி இருப்பினும், அப்பத்து நிலைகளுக்குமே இன்றியமையாமை கொடுத்து அவற்றையே சிறப்பித்துக் கூறியிருக்கும் நூல் இதுவேயாகும்.

# பொருளடக்கம்


1. பதிப்புரை iii

2. ஆராய்ச்சி முன்னுரை v

3. உண்மை நெறி விளக்கம் தெளிவுரை 1-12

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# உண்மை நெறி விளக்கம்

## ( தெளிவுரையுடன் )

### பாயிரம்

எண்ணும் அருள்நூல் எளிதின் அறிவாருக்(கு)
உண்மை நெறிவிளக்கம் ஓதினான் — வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனார் தாளே புனைந்தருளும்
நண்பாய தத்துவநா தன்.

(தெளிவுரை) வினைவயத்தால் உளதாகும் உடல் இன்றி அருள் வயத்தால் உளதாகும் உடலோடு கூடிய, குளிர்ந்த சீர்காழிப் பதியின்கண் தோன்றியருளிய சீர்காழிச் சிற்றம்பல நாடிகளின் திருவடிகளையே தலைமேற்கொண்டு விளங்கும் குருவருள் விருப்பம் மிக்க தத்துவ நாதன் என்பார், தம் ஆசிரியர் உயிர்களுக்கு உய்தியெனக் கருதிச் செய்த துகளறு போதத்தின் உண்மைகளை அறியவேண்டும் என விரும்புவார்க்கு அந்நூல் வழித்தாக இவ்வுண்மை நெறி விளக்கம் என்னும் நூலைச் செய்தருளினான் என்பதாம்.

காழித் தத்துவனார் எனப் பொதுவாகக் கூறினும், அப்பெயர் சீர்காழிச் சிற்றம்பலநாடிகளையே குறிக்கும். இதுபற்றி ஆராய்ச்சி முன்னுரையில் உரைத்தவற்றைக் காண்க.

### அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

1. மண்முதற் சிவமதீறாம் வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவமதீறாம் மலம்சடம் என்றல் காட்சி
மண்முதற் சிவமதீறாம் வகைதனில் தான்நி லாது
கண்ணுதல் அருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதும்அன்றே.

(தெ-ரை) நிலம் முதல் நாதம் ஈருகிய முப்பத்தாறு தத்துவங்களின் வடிவாக விளங்கும் உடல், கருவி, உலகு, நுகர்வு, செயல் ஆகியவற்றைத் தனக்கு வேருகக் காண்பதுவே தத்துவ வடிவு ( தத்துவ ரூபம் ) ஆகும். அம்முப்பத்தாறு தத்துவங் களுள்ளும் உயிர் ஒன்றி நின்று அறிவதல்லது அவை தாமாக அறியும் தகைமையவல்ல என்று உணர்வது தத்துவக் காட்சி (தத்துவ தரிசனம்) ஆகும். உயிர் திருவருளால் இம்முப்பத்தாறு தத்துவங்களின் வகையையும், வினைவையும் நன்கு அறிந்து அவற்ருெடு மீண்டும் கூடாமல் விட்டு விலகுவதே தத்துவத் தூய்மை – அதாவது தத்துவ நீக்கம் (தத்துவ சுத்தி) ஆகும்.

தத்துவம் – என்றும் அழியாதது. இங்கு என்றும் அழியாதது என்பது உலகு முடியும் காலம் வரையே ஆகும். இவ்வாறு உலகு முடியும் காலம் வரை நிற்கும் கருவிகளை என்றும் அழியாதது என்ற சொல்லால் கூறுதல், உலகு அழியும் காறும் இருக்கும் தேவர்களை என்றும் அழியாதவர் எனப் பொருள்படும் அமரர் என்னும் சொல்லால் கூறுதல்போலாம். உயிர் தனக்குற்ற வினையை நீக்குதற்குக் கருவியாக உள்ளன தத்துவங்கள் எனப்படும். அவை அகக்கருவி என முப்பத்தாறும், புறக்கருவி என அறுபதுமாகத் தொண்ணூற்ருறு என்பர். நிலம், நீர், தீ, வளி (காற்று), விண் (ஆகாயம்) எனப் பூதம் ஐந்தாம். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனத் தன்மாத்திரைகள் ஐந்தாம். சொல், கால், கை, எருவாய், கருவாய் எனத் தொழிற் கருவிகள் (கன்மேந்திரியம்) ஐந்தாம். மெய், வாய், கண், மூக்கு, செவி என அறிகருவிகள் (ஞானேந்திரியம்) ஐந்தாம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என உட்கருவிகள் (அந்தக் கரணங்கள்) நான்காம். புருடன், அராகம், வித்தை, கலை, நியதி, காலம், மாயை என வித்தியா தத்துவங்கள் ஏழாம். சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம், விந்து, நாதம் எனச் சிவதத்துவம் ஐந்தாம். நாத தத்துவத்தைச் சிவம் என்றும் கூறுவர். ஆக அகக் கருவிகளாக விளங்கும் தத்துவங்கள் முப்பத்தாறும். இங்கு முதலாகக் கூறிய நிலத்தையும், முடிவாகக் கூறிய நாதத்தையும் விதந்தே 'மண்முதல் சிவமது ஈரும்' என ஆசிரியர் கூறுகின்ருர்.

இறைவன் உயிரினிடத்து வைத்த கருணையால் அவ்வுயிர் களைக் காப்பாற்றும் பொருட்டு மாயையின் ஒரு பகுதியைக் கலக்குவன். மாயை தாங்கும் ஆற்றல் உடையது. இறை செலுத்தும் ஆற்றல் உடையது. இவ்விரு ஆற்றலும் மின்சார சக்திகளைப் போல்வன. இவ்விரண்டும் ஒன்றுடன் ஒன்று சேரும் போது ஒலி உண்டாகின்றது. இதுவே ஒலி தோன்றுவதற்குக் காரணம் ஆகும். இதனை நாதம் என்பர். இவ்வொலி விண்ணில் பரவுகின்றபோது ஏற்படும் வட்டவடிவே விந்து ஆகும். விந்து – புள்ளி அல்லது வட்டம் எனப் பொருள்படும். நாதம் என்பது உயிர்களுக்கு அறிவை எழுப்புவித்து நிற்கும் பேரறிவு ஆகும். விந்து என்பது உயிர்களுக்குத் தொழிலை எழுப்புவித்து நிற்கும் செயலாகும். விந்துவில் இருந்து தோன்றுவது சாதாக்கியம் ஆகும். இதனைச் சதாசிவம் என்றும் கூறுவர். அறிவு, செயல் ஆகிய இரண்டும் ஒத்த அளவில் கூடி இருப்பதே சாதாக்கியம் ஆகும். இதிலிருந்து செயல் மிகுந்து அறிவு குறைந்திருக்கும் நிலையை ஈசுவரம் என்பர். இதனை மகேச்சுவரம் என்றும் கூறுவர். இதிலிருந்து அறிவு மிகுந்து செயல் குறைந்த நிலையைச் சுத்த வித்தை என்பர். சிவபெருமானால் தொழிற்படும் இவ்வைந்து தத்துவங்களுக்கும் முறையே சிவம், சத்தி, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன் எனும் ஐவரும் தலைவர் ஆவர். இவை சுத்த தத்துவம் என்றும், சிவ தத்துவம் என்றும், பிரேர காண்டம் என்றும் பெயர் பெறும்.

ஈசுவர தத்துவத்தில் வாழ்கின்ற எண்மருள் முதல்வராய அனந்த தேவர் மகேசரின் ஆணையைப் பெற்று அசுத்த மாயையின் ஒரு பகுதியைக் கலக்குவர். அதனால் காரிய மாயை என்னும் தத்துவம் தோன்றும். அதில் இருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் தத்துவங்கள் தோன்றும். இவற்றுள் கலையிலிருந்து வித்தையும், வித்தையிலிருந்து அராகமும் தோன்றும் என்பாரும் உண்டு. அன்றிக் கலையிலிருந்தே வித்தையும் அராகமும் தோன்றும் என்பாரும் உண்டு. உயிர் இவ்வைந்துடனும் கூடிநின்று ஐம்புலன்களை நுகரும் நிலையில்

புருடன் எனப்படும். இவை உயிர்களுக்குச் சிறிது அறிவு விளங்குதற்குக் காரணமாய் இருத்தலின் சுத்த மாயை என்றும், உயிர்களுக்கு இன்ப துன்பங்களை உண்டாக்குதற்குக் காரணமாய் இருத்தலின் அசுத்த மாயை என்றும் பெயர்பெற நிற்றலின் இவற்றைச் சுத்தா சுத்த (சுத்த – அசுத்த) மாயை என்பர். இவை உயிர் களுக்கு உதவியாக நின்று நுகர்வுகளை உண்டாக்குவதால் போக காண்டம் என்றும், அவற்றை அவ்வுயிர்கள் நுகர்தற்கும் காரணமாய் இருத்தலால் போகசயித்திரு என்றும் கூறுவர்.

அனந்த தேவரின் ஆணையைப் பெற்று ஸ்ரீ கண்ட உருத்திரர் முற்கூறிய கலை என்னும் தத்துவத்தைக் கலக்க முக்குண வடிவாகிய மூலப்பகுதி தோன்றும். சாத்துவிகம், இராக்கதம், தாமதம் ஆகிய முக்குணங்களும் தம்முள் ஒரு படித்தாக நிற்கும் நிலை சித்தம் ஆகும். இவற்றுள் சாத்துவிகம் மிகுந்து மற்றவை குறைந்தநிலை புத்தி ஆகும். இப்புத்தி தத்துவத்தில் இருந்து இராக்கத குணம் மிகுந்து மற்றவை குறைந்ததாகிய அகங்காரம் தோன்றும். தைவிகங்காரத்துடன் சாத்துவிக குணம் பொருந்த மனமும், மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய அறிகருவிகள் ஐந்தும் தோன்றும். வைகாரி அகங்காரத்துடன் இராக்கத குணம் பொருந்தச் சொல், கால், கை, எருவாய், கருவாய் என்னும் தொழிற்கருவிகள் தோன்றும். பூதாதி அகங்காரத்துடன் தாமத குணம் பொருந்தச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றும். இவை நிலம் முதலிய பூதங்கள் தோன்றுதற்குக் காரணமாகலான் சூக்கும பூதங்கள் எனவும் பெயர் பெறும். அறிகருவிகளின் வாயிலாக வரும் சுவை, ஒளி, ஊறு முதலாயின இவற்றின் வேறும். இத்தன்மாத்திரைகளுள் ஒலியிலிருந்து விண்ணும், ஊற்றிலிருந்து காற்றும், ஒளியிலிருந்து தீயும், சுவையிலிருந்து நீரும், நாற்றத்திலிருந்து மண்ணும் தோன்றும்.

இக்கருவிகள் உயிர் தன் வினையை நீக்குதற்காக இறைவனால் அருளப்பெற்றிருப்பினும் இவற்றெடு ஒன்றி வாழ்வதே வாழ்வு, இவற்றான் வரும் இன்பமே இன்பம் எனக்கருதல் தவறாகும். 'பொருள் அல்லவற்றைப் பொருள் என்றுணரும் மருளானும் மாணாப் பிறப்பு' எனத் திருவள்ளுவர் கூறுவதும் ஈண்டு அறியத் தக்கதாகும். பிறப்பென்னும் பேதமை நீங்கற்கு இவற்றை அறிதலும் இவற்றினின்றும் நீங்கலும் தக்கதாகும்.

# தத்துவம் - 36

## சிவ தத்துவம் - 5

சிவம் × மாயை

1. நாதம்

2 விந்து

3. சாதாக்கியம்

4. மகேசுவரம்

5. சுத்த வித்தை

## வித்தியா தத்துவம் - 7

அனந்த தேவர் × அசுத்த மாயை

1. காரிய மாயை

2. காலம் 3. நியதி 4. கலை 5. வித்தை 6. அராகம்

7. புருட தத்துவம்

# ஆன்ம தத்துவம் - 24

ஸ்ரீ கண்ட உருத்திரர் × கலை

மூலப் பிர கிருதி

1. சித்தம்
2. புத்தி
3. அகங்காரம்

- தைவிக அக்ங்காரம் × சாத்துவிகம்
  - மனம் 4
  - மெய் 5
  - வாய் 6
  - கண் 7
  - மூக்கு 8
  - செவி 9
- வைகாரி அகங்காரம் × இராக்கதம்
  - சொல் 10
  - கால் 11
  - கை 12
  - எருவாய் 13
  - கருவாய் 14
- பூதாதி அகங்காரம் × தாமதம்
  - சுவை 15 — நீர் 20
  - ஒளி 16 — நெருப்பு 21
  - ஊறு 17 — காற்று 22
  - ஓசை 18 — விண் 23
  - நாற்றம் 19 — மண் 24

2. பாயிருள் நீங்கி ஞானம் தனைக்காண்டல் ஆன்ம ரூபம்
நீயும்நின் செயல்ஒன்(று) இன்றி நிற்றலே தெரிச னம்தான்
போய்இவன் தன்மை கெட்டுப் பொருளிற்போய் அங்குத் தோன்று(து)
ஆய்விடில் ஆன்ம சுத்தி அருள்நூலின் விதித்த வாறே.

(தெ-ரை) பரந்த இருளாகிய ஆணவ மலத்தினின்றும் நீங்கி, இறைவனுடைய பேரறிவு, தன் அறிவுக்கறிவாக விளங்கி நின்று உதவுதலை அறிவது உயிரின் வடிவாகும். உயிர் தன் செயலின்றி எல்லாம் சிவன் செயல் என்று எண்ணி வாழ்வது உயிர்க் காட்சியாகும். உயிர் எதனையும் நான் அறிகின்றேன் நான் நுகருகின்றேன் எனச் சுட்டி யறியும் அறிவு நீங்கித் திருவருளோடு ஒன்றிப் பின் அதன்வழிச் சிவத்தைச் சார்ந்து அதன்வயப்பட்டுப் பின் அதுவேதானாய் நிற்குநிலை உயிர்த் தூய்மை ஆகும். இவையே இறைவன் அருளிய அருள் நூல் களில் கூறப்பட்ட முறைமையாகும்.

எல்லா உயிர்களிடத்தும் பரந்து கிடத்தலின் ஆணவ மலத்தைப் 'பாயிருள்' என்றார். பாய்தல் – பரத்தல். 'பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டு என்றும் கணவர்க்கும் தோன்றாத கற்பு' எனத் திருவருட்பயன் இதன் தன்மையைக் கூறுதலும் இங்கு உளங்கொளற்குரியது. உயிர் தன்செயல் அறுதலாவது உலகினில் என்செயல் எல்லாம் உன்விதியே நீயே உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும் நினைந்து வாழ்வதாகும். இத்தகையோருக்கு இறைவன் தன்னையே தந்தருள்வன். இதனை 'நஞ்செயலற்று இந்த நாமற்றபின் நாதன் தன்செயல் தானே என்றுந்தீபற. தன்னையே தந்தான் என்றுந்தீபற' எனத் திருவுந்தியாரும் விளக்கி நிற்கும். போய் — திருவருளிடத்துச் (சத்தியினிடத்து) சென்று. பொருளிற்போய் — திருவருளாகிய சத்தி கூட்டச் சிவத்திடம் சென்று. பொருள் – சிவம்.

3. எவ்வடி வுகளும் தானும் எழிற்பரை வடிவ தாகிக்
கவ்விய மலத்துஆன் மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வமீண்டு அகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவன் என்றே
செவ்வையே உயிருட் காண்டல் சிவரூப மாகும் அன்றே.

(தெ–ரை) அறிவுஇல் பொருளும் அறிவுடைப் பொருளு மாகத் தோன்றி நிற்கும் நிற்பனவும் நடப்பனவுமாகிய பொருள்க ளோடும் இரண்டறக் கலந்து நின்று, கருணையே தனக்குரிய வடிவமாகக்கொண்டு, ஆணவ மலத்தால் விழுங்கப்பட்ட உயிர் களின் பொருட்டே, தனது அறிவு, இச்சை செயல்களினாலாய உடல், கருவி, உலகு, நுகர்வு முதலியவைகளைத் தந்து அவற்றால் பிறப்பு இறப்புக்களை ஆக்கி, அச்செயல்களின் வழிப் பக்குவப் பட்ட உயிர்களுக்கு மீண்டும் பிறப்பு இறப்புக்கள் உளவாகாவாறு காத்து அருள்பவன் சிவபெருமான் ஒருவனே என ஐயந்திரிபு இன்றி உயிர் உணர்வதே சிவவடிவு ஆகும்.

அனைத்துயிர்களிடத்தும் இறைவன் உயிர்க்குயிராய் விளங்கி நிற்கின்றான். உயிர்களை உய்விப்பதே திருவருட்செயல் ஆதலின் அதனை 'எழிற்பரை' என்றார். பரைவேறு இறைவனது அருள் வேறு அன்று. இறைவனது அருளே சத்தியாகும். 'அருளது சத்தியாகும் அரன்தனக்கு' என்னும் அருள்வாக்கும் காண்க. உயிர் கருவி கரணங்களின்றி நிற்கும் கேவல நிலையிலும், அவற்றோடு கூடிநிற்கும் சகல நிலையிலும், அவற்றின் நீங்கித் திருவருள் வயப்பட்டு நிற்கும் முத்தி நிலையிலும் ஆணவத்தோடு உயிர் பிணைந்து நிற்றலின், 'கவ்விய மலம்' என்றார். கேவல சகல நிலையில் உயிர் ஆணவத்தால் தன்தன்மை கெட்டு நிற்கும், முத்தி நிலையில் ஆணவமலம் வறுத்த வித்துப்போலத் தன் தன்மை கெட்டு நிற்க உயிர் திருவருளோடுஇயைந்து இன்புற்று நிற்கும். படைத்தல், காத்தல் முதலிய ஐந்தொழில்களையும் இறைவன் செய்வது உயிர்களின் பொருட்டேயாகும். இதனை,

அழிப்பு இளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திட நுகரச் செய்கை காப்பது கன்ம வொப்பின்

தெழித்திட மலங்கள் எல்லாம் மறைப்புஅருட் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம்.

– சுபக்கம்-பாடல் 57

எனும் சித்தியார் பாடல் விளக்கும். இவ்வுண்மைகளை ஐயத்தின் நீங்கித் தெளிந்தாலன்றி உயிர் இறைவனின் உண்மையை உணர்ந்து ஆட்பட்டு உய்ய இயலாது. ஆதலின் 'செவ்வையே உயிருட் காண்டல்' என்றார்.

## எண்சீர்க் கழி[illegible]நடிலாசிரிய விருத்தம்

4\. பரைஉயிரில் யான்என(து)ஒன்(று) அறநின்ற(து) அடியாம்
பார்ப்பிடம்எங் கும்சிவமாய்த் தோன்றல்அ(து) முகமாம்
உரையிறந்த சுகம்அதுவே முடியாகும் என்(று)அங்கு
உண்மையினை மிகத்தெளிந்து பொருள்வே(று)ஒன்(று)
தரைமுதலில் போகாது நிலையினில்நில் லாது [இன்றித்
தற்பரையில் நின்றழுந்தாது அற்புதத்தின் ஆகும்
தெரிவரிய பரமானந் தத்தில் சேர்தல்
சிவன்உண்மைத் தெரிசனமாய்ச் செப்பும் நூலே.

(தெ–ரை) திருவருள் யான் எனது என்னும் செருக்கு அறுமாறு உயிரினிடத்துப் பதிதல் இறைவது திருவடியாகும். பார்க்கும் இடம் எங்கும் சிவமாகவே தோன்றல் இறைவனது திருமுகமாகும். இத்தகைய சிவப்பேற்றால் மனத்தால் நினையவும் சொற்களால் சொல்லவும் இயலாதவாறு தோன்றும் பேரின்பமே இறைவனின் திருமுடியாகும். இவற்றின் உண்மையை மிகவும் தெளிவாக அறிந்து அப்பரம்பொருளே எங்கும் தோன்றி நிற்கின்றது எனப் பட்டறிவால் (அனுபவத்தால்) கண்டு, மண் முதலாகக் கூறப்பெறும் தத்துவங்களின் வயப்பட்டுப் பிறவாமலும், எல்லாவற்றையும் நானே செய்கின்றேன் எனக் கருதும் தன் முனைப்பாகிய தருக்குற்று நில்லாமலும், இவற்றையெல்லாம் அறிதற்குக் காரணமாகும் திருவருளையுணர்ந்து அதனிடத்தில் அழுந்திவிடாது அப்பாற்சென்று சிவத்தில் அழுந்தி அதனால்

விளையும் மேலான இன்ப நுகர்வில் திளைத்திருத்தல் சிவக்காட்சி யாகும் எனச் சிவ ஆகமங்கள் கூறும்.

தோன்றவரும்
யான்எனதுஎன்று அற்ற இடமே திருவடியா
மோன பரானந்தம் முடியாக – ஞானம்
திருவுருவா இச்சை செயலறிவு கண்ணு
அருளதுவே செங்கை யலரா – இருநிலமே
சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே !

எனவரும் குமரகுருபரரின் திருவாக்கு இச்சிவக்காட்சியை விளக்கிநிற்கும். பரை, தற்பரை என்பன திருவருளை அதாவது சத்தியைக் குறிக்கும். தரை முதல் – நிலம் முதலாக. நிலம் முதலாகக் கூறப்பெறும் தத்துவங்களின் வயப்பட்டு நிற்றல் பிறப்பு நிலை அதாவது சகலநிலையாகும். தரை முதலாகக் கூறப்பெறும் தத்துவங்களை மேல் 'மண்முதல் சிவமது ஈறும்' என உரைத்தமையால் உணரலாம். உடல் கருவிகளின்றி உயிர் ஆணவத்தோடு பிணிப்புண்டு நிற்கும் நிலை கேவல நிலையாகும். சிவத்துள் அடங்கி அதன் வயப்பட்டு நிற்கும் நிலை சுத்தநிலை ஆகும். ஈண்டுச் சிவக்காட்சியாகக் கூறும் நிலை இதுவேயாகும்.

5. எப்பொருள்வந் துற்றிடினும் அப்பொருளைப் பார்த்(து) இங்(கு)
எய்தும்உயிர் தனைக்கண்(டு)இவ் வுயிர்க்கு மேலாம்
ஒப்பில்அருள் கண்டுசிவத்(து) உண்மை கண்டு
உற்றதெல்லாம் அதனாலே பற்றி நோக்கித்
தப்பினைச்செய் வதும்அதுவே நினைப்பும்அது தானே
தரும் உணர்வும் பொசிப்பும்அது தானேஆகும்
எப்பொருளும் அசைவில்லை யெனஅந்தப் பொருளோ(டு)
இயைவதுவே சிவயோகம் எனும்இறைவன் மொழியே.

(தெ–ரை) உலகியலில் அறிவுடைய பொருளாயினும், அறிவற்ற பொருளாயினும் தம்மைவந்து பொருந்தும்பொழுது, அவை எஞ்ஞான்றும் நிலையற்றவை என்றும், அவை மாயையின்

செயல் என்றும், அவற்றான் வரும் இன்பதுன்பங்கள் இருவினையாகிய கன்மத்தின் செயல் என்றும், அவற்றை அறியவும், நுகரவும் உயிர்க்கு அறிவு இருப்பினும், அவ்வறிவு இறையருள் உணர்த்த வந்ததேயன்றித் தானாக அறியும் அறிவு அல்ல என்றும் இந்நிலைகளையெல்லாம் தனக்குமையில்லாத திருவருளே உணர்த்திற்று என்றும் உணர்ந்து அதனோடு பொருந்தி அவ்வளவில் அமையாது அவ்வருளையே திருமேனியாகக் கொண்டு நிற்கும் சிவமாம் பொருளின் உண்மை நிலையையும் கண்டு, அதனையே பற்றிநின்று மறப்பினைச் செய்வதும் அதுவே, நினைவைத் தருவதும் அதுவே, உணர்த்த உணருமாறு செய்வதும் அதுவே, அத்தகைய உயிர்க்கு இருவினை நுகர்வைத் தந்தருளுவதும் அதுவே என உணர்ந்து அப்பொருளன்றி எப்பொருளுக்கும் இயக்கம் தருவதுவும் அதுவே என அப்பொருளோடு பிரிவின்றி இயைந்து நிற்பதே சிவத்தோடு கலத்தலாகும் என ஆகமம் கூறும்.

உலகில் காணும் பொருள்களைக் கண்டவாறு காணாது, அவற்றிற்குக் காரணமாக இருப்பதையும், அவற்றின் இயல்பையும் உள்ளவாறு அறிவதே அறிவாகும்.

> எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எனத் திருவள்ளுவனார் கூறுவதும் இதுபற்றியே ஆகும். உயிர் வினைமாசு கழிந்து இன்புறுதற்காக இறைவன் செய்யும் ஐந்தொழிலும் அவனது ஒப்பற்ற கருணைப் பெருக்கேயாதலின் “ஒப்பில் அருள்” என்றார். நினைப்பு எனப் பின்வருதலின் முன் நின்ற தப்பு மறதியாயிற்று. அன்றித் தப்பு என்பதற்குக் குற்றம் என்றுபொருள் கண்டு அதற்கேற்ப நினைப்பு என்பதற்குக் குணம் எனப்பொருள் கூறுவாரும் உளர். இக்கருத்திற்கு “நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே” என்னும் திருவாக்கு அரண் செய்யும். பொசிப்பு – நுகர்வு. அவனன்றி ஓரணுவும் அசையாது ஆதலின் ‘எப்பொருளும் (அவனின்றி) அசைவில்லை’ என்றார்.

6. பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதிநெறி தப்பிடினும் தவறுகள் வந்திடினும்
தனக்கெனஓர் செயலற்றுத் தான்அதுவாய் நிற்கில்
நாதன்இவன் உடல்உயிராய் உண்டுஉறங்கி நடந்து
நானாபோ கங்களையும் தானாகச் செய்து
பேதமற நின்றுஇவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகம்எனப் பேசுநெறி இதுவே.

(தெ-ரை) மேற்கூறியவாறு சிவபரம்பொருளொடு கலந்து நின்ற பெரியவர்கள், உடல் ஊழாய்க்கழியும் வினையால் தவறுகள் செய்யினும், கொலை, களவு, கள்ளுண்ணல் முதலிய தீங்குகளில் தலைப்படினும், அறநெறி அல்லாத மறநெறியில் சேரினும், தத்தம் குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும், ஏற்றவாறு ஒழுகாது குற்றங்கள் பலவற்றைச் செய்யினும், இத்தகைய தவறுகளைத் தாம் செய்யாமலேயே, பிறரால் குற்றம் சாற்றப் பெறினும், அவர்கள் தம் செயல் அற்று அவ்விறை வழி நின்பின், இறைவனும் அவர்கள் உடம்பில் விளங்கி நின்று, அவர்கள் செய்யும் உண்டல், உறங்கல், நடத்தல் முதலிய செயல்களை யெல்லாம் வேற்றுமையின்றித் தன் செயலாக ஏற்றுத் தானாகச் செய்து விடுவன். இதுவே உயிர் தழைத்தற்குக் காரணமான சிவநுகர்வு (சிவபோகம்) எனச் சிவாகமங்கள் கூறும்.

பாதகங்கள் தந்தையைத் தாள்அற எறிதல் (சண்டேசுரர்), சூதாடுதல் (மூர்க்கர்), மனைவியைத் தருதல் (இயற்பகையார்) போல்வன.

இவன்உலகில் இதம்அகிதம் செய்த எல்லாம்
இதம்அகிதம் இவனுக்குச் செய்தார்பால் இயையும்
அவன்இவனாய் நின்றமுறை ஏகன் ஆகி
அரன்பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்
சிவனும்இவன் செய்திளலாம் என்செய்தி என்றும்
செய்தது எனக்கு இவனுக்குச் செய்தது என்றும்
பவம்அகல உடனாகி நின்றுகொள்வன் பரிவால்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே.

என்னும் சிவஞான சித்தியார் பாடலும், இத்தகையோரை இறைவன் என்றுகொண்டு அருள் செய்யுமாற்றை விளக்கும்.

உ

சிவ சிவ

'ஸ்ரீ குமரகுருபரர்'

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ

காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான்

சுவாமிகள் அவர்களின் அருளாணையின்வண்ணம்

-: வெளிவரும் :-

# சமய, இலக்கியத் திங்கள் இதழ்


**சந்தா விபரம் :**

| | | ரூ. பை. |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ( உள்நாடு ) | 7—50 |
| ,, ,, | ( வெளிநாடு ) | 10—00 |
| ஆயுட் சந்தா | ( உள்நாடு ) | 100—00 |
| ,, ,, | ( ஸ்ரீ லங்கா ) | 125—00 |

**விளம்பரக் கட்டண விகிதங்கள் :**

| | |
|---|---|
| அட்டை பின் பக்கம் | 150—00 |
| முன் அட்டை உள்பக்கம் | 125—00 |
| பின் அட்டை உள்பக்கம் | 100—00 |
| உள்ளே முழுப் பக்கம் | 60—00 |
| உள்ளே ½-பக்கம் | 30—00 |

ஆண்டு முழுவதும் தரப்பெறும் விளம்பரங்களுக்கு 20% கழிவு உண்டு. உகந்த விளம்பரங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தொடர்புகளுக்கு :- நிர்வாக ஆசிரியர்
'ஸ்ரீ குமரகுருபரர்' ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள் - 612504.

---

| | | |
|---|---|---|
| 1. நீதிநெறி விளக்கம் | ( தெளிவுரையுடன் ) | ரூ. 1—50 |
| 2. திருவருட் பயன் | ,, | ரூ. 1—50 |
| 3. உண்மை நெறி விளக்கம் | ,, | ரூ. 0—75 |

20 படிக்கு மேல் வாங்குவோர்க்கு 20% கழிவு உண்டு.
இவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீ குமரகுருபரர் இதழைச் சாரும்.


---


ஜெமினி அச்சகம், கும்பகோணம். (போன் : 885)